T2- புள்ளியியல்

மாதிரி வினாத்தாள் VI

9th Standard

**கணிதம்**

Reg.No. : | | | | | |

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:40:00 Hrs

Total Marks : 45

### பகுதி - அ

10 x 1 = 10

1) முதல் 10 இயல் எண்களின் சராசரி

(a) 25 (b) 55 (c) 5.5 (d) 2.5

2) –5 முதல் 5 முடிய உள்ள முழுக்களின் கூட்டுச்சராசரி

(a) 3 (b) 0 (c) 25 (d) 10

3) x, x + 2, x + 4, x + 6, x + 8 என்பவற்றின் கூட்டுச்சராசரி 20 எனில், x-ன் மதிப்பு

(a) 32 (b) 16 (c) 8 (d) 4

4) 5, 5, 5, 5, 5, 1, 2, 2, 3, 3, 3, 4, 4, 4, 4 என்ற விவரங்களின் முகடு

(a) 2 (b) 3 (c) 4 (d) 5

5) 14, 12, 10, 9, 11 என்ற விவரங்களின் இடைநிலை அளவு

(a) 11 (b) 10 (c) 9.5 (d) 10.5

6) 2, 7, 4, 8, 9, 1 என்ற விவரங்களின் இடைநிலை அளவு

(a) 4 (b) 6 (c) 5.5 (d) 7

7) முதல் 5 முழு எண்களின் சராசரி

(a) 2 (b) 2.5 (c) 3 (d) 0

8) 10 எண்களின் கூட்டுச்சராசரி –7. ஒவ்வொரு எண்ணுடனும் 5 ஐக் கூட்டினால் கிடைக்கும் புதிய கூட்டுச்சராசரி

(a) -2 (b) 12 (c) -7 (d) 17

9) 24 இன் காரணிகளின் கூட்டுச்சராசரி

(a) 8.5 (b) 5.67 (c) 7 (d) 7.5

10) 5 எண்களின் கூட்டுச்சராசரி 20. அவற்றிலிருந்து ஓர் எண்ணை நீக்கினால் அவற்றின் கூட்டுச்சராசரி 15 எனில், நீக்கப்பட்ட எண்

(a) 5 (b) 40 (c) 20 (d) 10

### பகுதி - ஆ

10 x 2 = 20

11) 5 எண்களின் சராசரி 32. அவ்வெண்களில் ஒன்றை நீக்கும்போது, சராசரியில் 4 குறைந்தால் நீக்கப்பட்ட எண்ணைக் காணவும்.

12) கீழ்காணும் விவரத்திற்கு நேரடி முறை மூலம் சராசரியைக் காண்க.

| மதிப்பெண்கள் | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 5 | 10 | 25 | 30 | 20 | 10 |

13) கீழ்காணும் பரவலின் இடைநிலை அளவு காண்க.

| மதிப்பு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் | 1 | 3 | 2 | 4 | 8 | 2 |

14) 100 மாணவர்களின் மதிப்பெண்களின் சராசரி 40 என்று கணக்கிடப்பட்டது. பின்பு, 53 என்ற மதிப்பெண் 83 என்று தவறுதலாக எடுக்கப்பட்டது தெரியவந்தது. சரியான மதிப்பெண்களைக் கொண்டு சரியான சராசரியைக் காண்க.

15) 12 எண்களின் சராசரி 48 என்க. ஒவ்வொரு எண்ணையும் 4 ஆல் பெருக்கினால், கிடைக்கும் எண்களின் சராசரி என்ன?

16) 6 மாணவர்களைக் கொண்ட ஒரு குழுவின் சராசரி எடை 48 கிலோ ஆகும். அவற்றில் 5 மாணவர்களின் எடை 50 கிலோ, 45 கிலோ, 50 கிலோ, 42 கிலோ மற்றும் 40 கிலோ எனில், ஆறாவது மாணவனின் எடையைக் காண்க.

17) 100 எண்களின் சராசரி 40 என்று காணப்பட்டது. கணக்கிடும் நேரத்தில் 3 மற்றும் 72 என்ற இரு விவரங்கள் 30 மற்றும் 27 எனத் தவறுதலாக எடுத்துக்கொள்ளப்பட்டது தெரியவந்தது எனில், சரியான சராசரியைக் காண்க.

18) கீழ்க்காணும் பரவலில் சென்னையைச் சார்ந்த ஒரு காலணிக் கடையில் ஒரு குறிப்பிட்ட நாளில் 100 சோடி காலணிகள் விற்பனை செய்ததற்கான விவரம் தரப்பட்டு உள்ளது. இப்புள்ளி விவரத்தின் முகடு காண்க.

| காலணியின் அளவு (அங்குலம்) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|
| சோடிகளின் எண்ணிக்கை | 2 | 5 | 3 | 23 | 39 | 27 | 1 |

19) ஒரு சிறிய தொழிற்கூடத்தில் ntiy செய்யும் 50 தொழிலாளர்களிடம், அவர்கள் ஒவ்வொருவரும் வேலைக்காக எத்தனை கிலோ மீட்டர் தொலைவு வந்து செல்கிறார்கள் என்ற கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் பெறப்பட்டன. இவ்விவரங்களுக்கு ஒரு நிகழ்வெண் செவ்வகம் மற்றும் நிகழ்வெண் பலகோணம் அமைக்கவும்

| தூரம் (கி.மீ) | 50-59 | 40-49 | 30-39 | 20-29 | 10-19 |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 4 | 5 | 9 | 18 | 14 |

20) Find the median of the following numbers

24, 22, 23, 14, 15, 7, 21

### பகுதி - இ

5 x 3 = 15

21) கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவைக் காண்க

18,12,51,32,106,92,58

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

22) கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் இடைநிலை அளவைக் கணக்கிடவும்.

| பிரிவு இடைவெளி | 1-5 | 6-10 | 11-15 | 16-20 | 21-25 | 26-30 | 31-35 |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் | 1 | 18 | 25 | 26 | 7 | 2 | 1 |

23) கீழ்வரும் புள்ளிவிவரத்திற்கு முகடு காண்க.

| காலணிகளின் அளவுகள் | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|
| விற்ற சோடிகளின் எண்ணிக்கை | 15 | 17 | 13 | 21 | 18 | 16 | 11 |

24) கீழ்க்காணும் புள்ளிவிவரத்தின் முகடு காண்க.

| எடை (கிராம்) | 21-25 | 26-30 | 31-35 | 36-40 | 41-45 | 46-50 | 51-55 | 56-60 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 5 | 4 | 3 | 18 | 20 | 14 | 8 | 3 |

25) ஓராண்டில், ஒரு நகரத்தில் ஒருவித நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டு உள்ளது.

| வயது (வருடங்களில்) | 5-14 | 15-24 | 25-34 | 35-44 | 45-54 | 55-64 |
|---|---|---|---|---|---|---|
| பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை | 6 | 11 | 12 | 10 | 7 | 4 |

மேற்கண்ட புள்ளி விவரத்தின் சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு காண்க.

*****************************************